IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI.

| MCOP. No. 64/2016 | | | |
|---|---|---|---|
| Name: | சரவணன் | Religion: | இந்து |
| Father's Name: | பாலன் | Caste: | |
| Village: | எசன்னக்கோரை | Calling: | டிரைவர் (விபத்துக்கு முன்பு) |
| Taluk: | திருச்சி | Age: | 39 |

Date: 1.8.2019 – PW-1

மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை.

நான் மனுதாரர் தரப்பில் 1 வது சாட்சி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாணப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் தெரியும். படித்துப் பார்த்துக் கையொப்பம் செய்தேன். நாமக்கல் வேலகவுண்டம்பட்டி காவல் நிலைய குற்ற எண். 98/2015 ன் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்கிறேன். TN-48-AA-1681 என்ற பதிவு எண் உள்ள வாகனத்தின் 24.6.2015 ம் தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்கிறேன். நாமக்கல் சி. எம். மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்கிறேன். மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்கிறேன் (புதுப்பிக்கப்பட்ட உரிமத்துடன் சரிபார்க்கப்பட்டது). மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ் ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்கிறேன். ஆவணங்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்றதற்கான குறிப்பாணை ம.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்கிறேன். எனது சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக் கொண்டு உத்தரவிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

2 ஆம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- Saravanan

Sd/- M. Mekala Mythili,
Sub Judge, Sankari.